## டொமினிகா



# தேவன் தம் பங்கைச் செய்கிறார்

*டொமினிகாவில் ரோட்ரிக்கின் அம்மாவும் சகோதரர்களும் இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*இந்த ஊழிய அறிக்கை ரோட்ரிக் என்பவரைப் பற்றியது; இவர், கரீபியன் தீவு தேசமான டொமினிகாவில் புதிதாகக் கட்டப்படயிருக்கிற பள்ளியின் கட்டிடக்கலைஞர்; இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால் கட்டப்படவுள்ளது. ஆனால் இந்தச் சம்பவம் **1984** இலேயே ஆரம்பமானது.*

பிரான்சிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் உதவித்தொகை உதவியுடன் படிப்பதற்கு ரோட்ரிக்கிற்கு வாய்ப்பு கிடைத்தது.

அவருக்கு அம்மா மட்டும்தான்; அம்மாவிடமும் தன் இரு சகோதரர்களிடமும் விடைபெற்று, கரீபியன் தீவு தேசமான டொமினிகாவிலிருந்த உலகத்தின் பாதி தூரத்தைக் கடந்து பிரான்சிற்குச் சென்றார்.

படிப்புகள் ஆரம்பமாயின; ஆனால் ஏதோ ஒன்று குறைவாக இருப்பதாக ரோட்ரிக் உணர்ந்தார்.

அதைச் சரிசெய்வதற்காக அடுத்த ஞாயிற்றுக்கிழமையில் ஆலயத்திற்குச் சென்றார். ஆனாலும் மனம் திருப்தியாகவில்லை. அடுத்த ஞாயிற்றுக்கிழமையிலும் ஆலயம் சென்றார்; ஆனாலும் நிம்மதி வரவில்லை. அப்போதுதான் ஒரு விஷயம் மனதில் புரிந்தது. அவருடைய அம்மா அவரிடம் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயம் செல்ல வேண்டுமெனச் சொல்லிக் கொடுத்திருந்தாலும், சனிக்கிழமைதான் மெய்யான ஓய்வுநாள் என்று தன் உள்ளத்தில் ஆழமாக உணர்ந்திருந்தார்.

பிரான்சிற்குச் செல்லுவதற்கு முன்னரே, வேதாகமத்தை வாசிக்க

ஆரம்பித்திருந்தார். தேவனை அறிந்துகொள்வதற்காக வேதாகமத்தை வாசிக்கவில்லை. அவரும் அவரது பள்ளி நண்பர்களும் வேதாகம விஷயங்கள்பற்றி காராசாரமாக விவாதித்துக் கொள்வார்கள்; அந்த விவாதத்தில் வெற்றிபெறுவதற்காக வேதாகமத்தை வாசித்தார். வேதாகமத்தை வாசித்தபோது, வாரத்தின் ஏழாம் நாளையே தேவன் ஓய்வுநாளாக ஏற்படுத்தியிருப்பதாக அறிந்துகொண்டார். ஆனாலும் அதன்படி அவர் நடக்கவில்லை.

பிரான்சிற்குச் சென்றபிறகு, ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிக்கிற யாரையாவது சந்திக்க முடியுமா என்று யோசித்தார். டொமினிகாவில் செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள்தாம் ஓய்வுநாளில் ஆசரிப்பதாகக் கேள்விப்பட்டிருந்தார்; எனவே, பிரான்சிஸ் அட்வென்டிஸ்டுகள் இருப்பார்களாவென விசாரித்தார். அவர் வகுப்பு மாணவன் ஒருவர், டொமினிகாவைச் சேர்ந்த ஒரு அட்வென்டிஸ்ட் மாணவரை ரோட்ரிக்கிற்கு அறிமுகம்செய்தார். அந்த நபருடன் சேர்ந்து ரோட்ரிக் ஆலயம் செல்ல ஆரம்பித்தார். ரோட்ரிக் பிரான்சிற்கு வந்த ஒரு மாதமே ஆகியிருந்தது.

தான் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபைக்குச் செல்லுவதுபற்றி ரோட்ரிக் தன் அம்மாவிடமோ சகோதரர்களிடமோ சொல்லவில்லை. சொன்னால் என்ன நினைப்பார்களோ? அம்மா கவலைப்படுவாரா? சகோதர்ர்கள் இழிவாக எண்ணுவார்களா? என்று யோசனையாக இருந்தது. அவர் அதிக நாட்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

அவர் ஓய்வுநாளை ஆசரிக்க ஆரம்பித்து இரண்டு மாதங்களில், அவருடைய அம்மாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

ரோட்ரிக் அந்தக் கடிதத்தைத் திறந்து வாசிக்க ஆரம்பித்தார். அதில், தானும் ரோட்ரிக்கின் இரு சகோதரர்களும் டொமினிகாவில் அட்வென்டிஸ்டுகளிடம் வேதாகம விஷயங்களைக் கற்றுக்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

ரோட்ரிக்கால் நம்ப முடியவில்லை. தாங்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தாலும், தானும் தன் குடும்பத்தினரும் தேவனை ஒரே பாதையில் பின்பற்றுகிறோமோ என்று யோசனை ஓடியது.

'நானும் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் அட்வென்டிஸ்ட் சபைக்குத்தான் சென்றுக்கொண்டிருக்கிறேன்' என்று பதில் எழுதினார்.

அந்தக் கடிதத்தை வாசித்தபோது ரோட்ரிக்கின் சகோதரர்களுக்கும் அம்மாவுக்கும் ஆச்சரியமாக இருந்தது.

இரண்டு மாதங்கள் கடந்தன; டொமினிகாவில் ரோட்ரிக்கின் அம்மாவும் சகோதரர்களும் இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள். அதன்பிறகு இரண்டு மாதங்கள் கழித்து, ரோட்ரிக பிரான்சில் ஞானஸ்நானம் பெற்றார்.

பிரான்சிற்குச் சென்று ஒன்பது மாதங்கள்தாம் ஆகியிருந்தன; ஆனால் ரோட்ரிக்கின் வாழ்க்கை முற்றிலும் மாறியது. அதே காலக்கட்டத்தில், டொமினிகாவில் அவ

ருடைய அம்மா மற்றும் சகோதரர்களுடைய வாழ்க்கையும் முற்றிலும் மாறியது. பவுல் சொன்னதுபோல, ‘இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின’. 2கொரிந்தியர் 5:17.

அடுத்த வருடத்தில், முதல் விடுமுறைக்காக ரோட்ரிக் டொமினிகாவிற்கு வந்தபோது, ஓய்வு நாளில் அம்மா மற்றும் சகோதரர்களுடன் சேர்ந்து டொமினிகாவில் ஓய்வுநாள் ஆராதனைகளில் கலந்து கொண்டார். தேவன் தங்கள் குடும்பத்தில் செய்த கிரியைகளை எண்ணி அந்தக் குடும்பத்தார் தேவனைப் போற்றினார்கள்.

“பிரான்சில் தேவன் என்னை வழிநடத்திக் கொண்டிருந்த அதே சமயத்தில், டொமினிகாவில் என் குடும்பத்தினரையும் வழிநடத்திக் கொண்டிருந்தார். தேவகரம் செயல்படுவதைக் காண்பது ஆச்சரியமாக இருந்தது. நான் ஓய்வுநாளில் ஆலயம் செல்லுவதாக என் குடும்பத்தினரிடம் சொல்லவே இல்லை; ஆனால் நாங்கள் அனைவருமே தேவ சித்தத்தைத் தேடிக்கொண்டுதான் இருந்திருக்கிறோம். தேவன் விநோதமான வழிகளில் செயல்படுகிறார்” என்று ரோட்ரிக் சொன்னார்.

டொமினிகாவில் எபினேசர் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆரம்பப்பள்ளியில் கட்டிட வசதிகள் செய்வதற்கு இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்படப் போகிறது. உதாரத்துவமாக காணிக்கை கொடுப்பதற்கு நன்றி. ரோட்ரிக்தான் அதன் கட்டிடக் கலைஞர்; இலவசமாக அந்த வேலையைச் செய்திருக்கிறார். “நாம் நினைக்கிற நேரத்தில் தேவன் செயல்படுவதில்லை. தேவன் நம்மிடம் உண்மையை எதிர்பார்க்கிறார். நாம் உண்மையும் கீழ்ப்படிதலுமாக இருந்தால், அவர் தம் பங்கைச் செய்கிறார்” என்று சொன்னார்.

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் டொமினிகாவைக் காட்டுங்கள். பிறகு ரோட்ரிக் படித்த பிரான்ஸ் நாட்டையும், டொமினிகாவின் தலைநகரான ரோசாவையும் காட்டுங்கள். அங்கு புதிதாக ஒரு ஆரம்பப்பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு பதின்மூன்றாம் வாரக் காணிக்கை பயன்படப் போகிறது.
- ரோட்ரிக்கின் ஒரு சிறிய காணொளியை யூடியூபில் காண்பதற்கு: bit.ly/Roderick-IAD.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் “ஐ வில் கோ“ என்ற திட்டத்தின் பின்வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, “தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்”.